செய்தி வெளியீடு எண் : 1406 நாள் : 10.09.2024

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 874 ஊராட்சிகளுக்கு 997 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, பல்வேறு துறைகளின் சார்பில் 1607 நபர்களுக்கு 34.95 கோடி மதிப்பீல் நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம், வருவாய்த்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளில் என மொத்தம் 1314.99 இலட்சம் மதிப்பீட்டிலான 18 முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்று இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 429 ஊராட்சிகளுக்கு 494 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள், சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 445 ஊராட்சிகளுக்கு 503 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் என மொத்தம் **874** ஊராட்சிகளுக்கு **997** கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கியும், பல்வேறு துறைகளின் சார்பில் **1607** நபர்களுக்கு **34.95** கோடி மதிப்பீல் நலத்திட்ட உதவிகளையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ. 461.64 இலட்சம் மதிப்பீட்டிலான 15 முடிவுற்ற திட்ட பணிகளையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ. 389.00 இலட்சம் மதிப்பீட்டிலான 01 முடிவுற்ற திட்ட பணிகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் ரூ. 30.95 இலட்சம் மதிப்பீட்டிலான 01 முடிவுற்ற திட்ட பணிகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ. 433.40 இலட்சம் மதிப்பீட்டிலான 01 முடிவுற்ற திட்ட பணிகளையும் திறந்து வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,**

நான் பேச வேண்டிய அனைத்தையுமே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் பேசி விட்டார்கள். பேசுவதற்கு எனக்கு எதுவுமே கிடையாது. மிச்சத்தையும் காணொளியில் காட்டிவிட்டார்கள். இன்னும் இரண்டு மூன்று விஷயங்களையும் அதையும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அதையும் சொல்லிவிட்டார். இருந்தாலும் ஒன்று, இரண்டு விஷயங்களை இங்கே நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சியின் மூலமாக சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள 874 கிராம ஊராட்சி மன்றங்களுக்கு கிட்டத்தட்ட 1000 எண்ணிக்கையிலான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள். அதேபோல் 385 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள். கூட்டுறவுத் துறை சார்பாக 10 கோடியே 58 லட்சம் ரூபாய் பயிர்க்கடன். 158 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பு. அதே போல அரசினுடைய பல்வேறு துறைகளின் கீழ் மொத்தம் இன்றைக்கு மட்டும் 1250 பயனாளிகளுக்கு 14 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். பெருமையடைகின்றேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12525 அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு

உபகரணங்கள் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் துவங்கப்பட்ட திட்டம் தான், கடந்த பிப்ரவரி மாதம் மதுரையில். துவக்கப்பட்ட திட்டம் தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம். இதுவரை 11 மாவட்டங்களிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அளித்து இருக்கின்றோம். இன்றைக்கு சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களை கொண்ட கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் எந்த அளவிற்கு வீரத்திற்கும், தியாகத்திற்கும் பெயர்போன மாவட்டங்களோ அதே அளவு விளையாட்டு துறையிலும் சிறந்து விளங்குகின்ற மாவட்டங்கள். அதனால் தான் இன்று முதலமைச்சர் கோப்பை 2024 போட்டிகளை ஒரு பகுதியாக இன்றைக்கும் காலை சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான போட்டிகளை நானே நேரடியாக வந்து துவங்கி வைத்தேன். இந்த வருடம் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளுக்கான பரிசுத் தொகையை மட்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 37 கோடி ரூபாயாக உயர்த்தி தந்து இருக்கின்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கு கூட விளையாட்டு துறை சாதனையாளர்கள் வந்திருக்கிறார்கள். இராமநாதபுரத்தை சேர்ந்த டென்னிஸ் வீரர் தம்பி நந்தகிஷோர் இது வரை இங்கு வருகை தந்து இருக்கிறார். தன்னுடைய பள்ளி காலத்தில் இருந்தே டென்னிஸ் விளையாட்டில் தம்பி நந்தகிஷோர் பல சாதனைகளை படைத்து வருகின்றார். தேசிய மண்டல மற்றும் கேலோ இந்தியா என பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கங்களை வென்று தமிழ் நாட்டிற்கும் இந்தியாவுக்கும் பெருமை தேடித்தந்துள்ளார். தம்பி நந்தகிஷோர் அவர்கள். அவருக்கு அனைவரின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல சிவகங்கை சேர்ந்த தம்பி பிரனேஷ் அவர்களும் இங்கு வருகை தந்து இருக்கின்றார். தமிழ்நாட்டின் 28வது கிராண்ட்மாஸ்டர் தம்பி பிரனேஷ் செஸ் போட்டியில் சர்வதேச செஸ் போட்டியிலும் பல்வேறு சாதனைகளை பதக்கங்களை தொடர்ந்து வென்று வருகின்றார். இந்த இளம் வயதிலே அவருடைய கோரிக்கை Elite Schemes ல் அவருடைய பெயரை சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்து இருக்கின்றார். விரைவில் இந்த கோரிக்கை நிறைவேற்றி தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இரு விளையாட்டு வீரர்களின் சாதனை பயணம் தொடரட்டும். இருவருக்கும் நம்முடைய திராவிட மாடல் அரசும், நம்முடைய விளையாட்டுத் துறையும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் துணை நிற்பார்கள் என்று இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இங்கே இருந்த இரண்டு வீரர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உலகம் முழுவதும் பல்வேறு சாதனைகளை தொடர்ந்து படைத்து வருகின்றார்கள்.

பாரிசில் சமீபத்தில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டில் இருந்து 6 வீரர்களை நாம் அனுப்பி வைத்தோம். அந்த 6 வீரர்களுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஊக்கத் தொகையாக விளையாட்டு போட்டிக்கு செல்வதற்கு முன்பாகவே ஊக்கத் தொகையாக 7 லட்சம் ரூபாய் அளித்து இருந்தார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த 6 பேரில் 4 பேர் இன்றைக்கு வெற்றிப் பெற்று பதக்கத்தோடு திரும்பி வந்து இருக்கிறார்கள். விரைவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு திரும்பியதும் அந்த 6 பேருக்கும் உயரிய ஊக்கத்தொகை வழங்கி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, உலகமே வியக்கும் வகையில் தெற்காசியாவில் முதன் முறையாக Formula 4 இரவு நேர கார் பந்தயத்தை சென்னையை மிக வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். சென்ற வாரம் கடந்த ஜனவரி மாதம் கேலோ இந்தியா இளையோர் போட்டிகளை தமிழ்நாட்டிலே முதன் முறையாக வரலாற்றிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் நடத்தி காட்டினோம். கேலோ இந்தியா போட்டியில் 38 தங்கப் பதக்கம் 21 வெள்ளி பதக்கம், 39 வெண்கலப் பதக்கம் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதன்முறையாக பதக்க பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்தது. இப்படி விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டின் சாதனைகளை நான் சொல்லிக்கொண்டே போகலாம். நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத்துறை எடுத்துவரும் முயற்சிகளுக்கு பல்வேறு திசைகளில் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றது. சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய விளையாட்டுத் துறையை பாராட்டி CII – Confederation of Indian Industry என்ற அமைப்பு Best State Promoting Sports என்ற அந்த உயரிய விருதை கொடுத்து நம்மை கௌரவித்தது. அது மட்டுமல்ல இந்த The Hindu Sports Star பத்திரிக்கை சார்பாக Best State for Promotion of Sports எனும் உயரிய விருதை கொடுத்து தமிழ்நாடு அரசை கௌரவித்தார்கள்.

அதே போல் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கி அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு தொடர்ந்து உதவிகளை செய்து வருகின்றோம். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் நிதி உதவி பெற விரும்புகின்ற விளையாட்டு வீரர்கள் TNCF என்ற இணையதளத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம்முடைய வீரர், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த 3 வருடங்களாக உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகிறார். கடந்த 3 வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 1300 விளையாட்டு வீரர்களுக்கு ரூபாய் 31 கோடிக்கும் மேலாக உயரிய ஊக்கத்தொகையை வழங்கி இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதுமட்டுமல்ல, அரசு மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில், வேலை வாய்ப்புகளில், விளையாட்டு வீரர்களுக்கு 3% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்று பல்வேறு வருடங்களாக விளையாட்டு வீரர்கள் கோரிக்கை வைத்து வருகின்றார்கள். கழக அரசு அமைந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சருடைய சீரிய நடவடிக்கையின் காரணத்தால் முதற்கட்டமாக 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பினை முதன் முறையாக வழங்க இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கின்றேன். விளையாட்டுத்துறை வளர்ச்சி வெறும் நகரங்களுடன் நின்றுவிடக்கூடாது. தேங்கிவிடக்கூடாது என்பதற்காக அவை கிராமங்களுக்கும், இந்த விளையாட்டு வீரர்களுடைய வளர்ச்சிக்கும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை சென்றடைய வேண்டு மென்ற ஒரு முயற்சிதான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை தொடங்கி வைத்தோம். முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல திட்டங்கள் இருக்கின்றன. எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும் விளையாட்டு துறை சார்பாக முதன் முறையாக கலைஞரின் பெயரால் ஒரு திட்டம் செயல்படுத்தபடுகிறது என்றால் அது இந்த கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு உபகரணங்கள் திட்டம் தான்.

கலைஞர் பெயரை இந்த திட்டத்திற்கு சூட்டியதற்கு காரணம் ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கக்கூடிய அத்தனை குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதுதான் அவருடைய சிறப்பு. அதனால்தான் யாராலும்

எப்போதாலும் வீழ்த்த முடியாத ஒரு அரசியல் வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவிலே உயர்ந்த தலைசிறந்த வீரராக திகழ்ந்து வந்தார். அத்தகைய கலைஞருடைய பெயரால் இந்த விளையாட்டு உபகரணங்கள் இன்றைக்கு வழங்கப்படுகின்றன. எனவே இவற்றை பெறக்கூடிய இளைஞர்கள் கலைஞர் அவர்களுக்கு இருந்த அந்த குணங்களையும் திறமைகளையும் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் பெற வந்துள்ள இந்த சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி களையும், அந்த ஊராட்சிகளுடைய முகங்களாக இருக்கக்கூடிய மாணவர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும், இளைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல இங்க கிட்டத்தட்ட 385 பயனாளிகளுக்கு பட்டா பெற வந்துருக்கிறீர்கள். பட்டா பிரச்சனை தீர்க்கவேண்டும் என்பது நம்முடைய திராவிட மாடல் அரசு ஆரம்பத்திலிருந்தே உறுதியாக இருந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தான் கடந்த 2 மாதங்களில் மட்டும் 20000 வீட்டுமனை பட்டாக்களை தலைநகர் சென்னையில் மட்டும் கொடுத்து இருக்கின்றோம். அந்த வகையில் இன்றைக்கு இங்கே வீட்டுமனை பட்டா பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்து கொள்கின்றேன். நம்முடைய அரசு அமைந்தது முதல் யாருக்கு என்ன தேவை இருக்கிறது என்பதை ஆராய்ந்து திட்டங்களை வகுத்து வருகின்றது. இங்கே கூட்டுறவு துறை சார்பாக பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு கடன் உள்ளிட்டவற்றை வழங்க இருக்கின்றோம். முக்கியமாக 158 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்புகளை இங்கே வழங்க இருக்கின்றோம். நேற்றைய தினம் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 2874 கோடி ரூபாய் அளவிலான வங்கிக்கடன் இணைப்பினை வழங்கினோம்.

உங்களுக்கு வழங்கப்படும் இந்த வங்கிக்கடன் இணைப்புகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. உங்களுடைய உழைப்பின் மீது அவர் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை தொகையாக தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்க்கின்றார்கள் என்று கூறிக்கொள்கின்றேன். மகளிர் உங்களுடைய ஏற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசும், முதலமைச்சர் அவர்களும் செயல்படுத்தி வருகின்றார்கள். உதாரணத்திற்கு மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் மூலம் இதுவரை இந்த 3 வருடங்கள் மட்டும் 520 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கின்றீர்கள். ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயண திட்டத்தின் மூலம் மாதம் கிட்டத்தட்ட 1000 ரூபாய் சேமிக்கின்றார்கள் அதேபோல் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். அதேபோல் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் உயர் கல்வி பயிலுகின்ற 7 லட்சம் மாணவ, மாணவிகள் மாதம் மாதம் 1000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை பெற்று வருகிறார்கள். இது எல்லாவற்றிற்கும் மேலாக 1 கோடியே 16 லட்சம் மகளிர் கடந்த ஒரு வருடமாக மாதம் 1000 வீதம் 12000 ரூபாய் உரிமைத் தொகை பெற்று வருகிறார்கள். இந்த திட்டங்களால் தான் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு இன்றைக்கு No 1 இடத்தில் இருக்கின்றது. இதையெல்லாம் நீங்கள் உங்களுடைய நண்பர்கள், உறவினர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். எப்படி எங்களுக்கு எங்களுடைய முதலமைச்சர் தூதுவரோ. அதே மாதிரி நீங்க இந்த அரசினுடைய தூதுவராக ஒவ்வொருத்தரும் திகழ்ந்து, அரசினுடைய சாதனைகளை இன்னும் மக்கள்கிட்ட எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்

கொள்கின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உங்களை வெறும் பயனாளிகள் ஆக பார்க்கவில்லை. அரசினுடைய பங்கேற்ப்பாளராக பார்க்கின்றார் என்று கூறி கொண்டு வந்து இருக்கக்கூடிய உங்க அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர் பெரியகருப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர் எஸ். ராஜகண்ணப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., காரைக்குடி மேயர் திரு. எஸ். முத்துதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். மாங்குடி, திரு. எஸ். முருகேசன், திருமதி. ஆர். தமிழரசி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாதரெட்டி, இ.ஆ.ப., சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரனேஷ், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர் நந்தகிஷார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu